1990 மார்ச் 30]

வருகிறது என்பதோடு, இந்த ஆண்டு இந்த அரசு உத்தரவு வழங்குவதற்கு முன்னால் அங்கே கெடுபிடி வசூல் செய்து கட்டப்பட்டிருக்கின்ற அந்த விவசாயிகளிடமிருந்து வசூல் செய்த தண்டத் தீர்வையை அவர்களுக்கு திருப்பிக் கொடுப் பதற்கு அரசு முன்வருமா என்பதைநான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—11—1989ல் இதுகாறும் விதிக்கப்பட்ட தண்ணீர் தீர்வையில் நிலுவையாக உள்ளதொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை படி சலுகை முறையற்ற அதாவது வாய்க்கால் உடைத்து பாசன செய்வது போன்ற இனங்களுக்குப் பொருந்தாது. மேற்காணும் அரசாணைக்கு இணங்கபெரியார் மாவட்டத்தில் பயிர்கட்டுபாடு இனத்தில் நிலுவையாக உள்ள சுமார் 3 கோடி ரூபாய் தள்ளுபடி சலுகைக்கு உட்படுகிறது.

கிராமப்புறங்களில் வீடு கட்டிக்கொள்ள கடன்.

*2380—திரு. ஆர். அண்ணாநம்பி :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளியோருக்கு சொந் தத்தில் வீடு கட்டிக் கொள்ள மானியமும், கடனும் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் அதாவது 1989-90 ஆவது நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இது அமுல்படுத்தப்படும் என்றால் அதாவது கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு நாம் எவ்வளவு கடன் கொடுக்க இருக்கிறோம், எத்தனை ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது, ரூரல் அவுசிங் ஸ்கீம் என்று நாம் ஏற்கெனவே வைத்து இருக்கிறோம். அந்த திட்டத்தின் மூலமாக 31 ஆண்டுகளுக்கு அவர்கள் வில்லங்க சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்று இருக்கிறதே. அதுவும் இன்று கட்டுப்படுத்தப்படுமா அல்லது ரத்து செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த ரூரல் அவுசிங் ஸ்கீம் என்பதை பெயர் மாற்றம் செய்து தமிழ்நாடு கிராம வீட்டு வசதி திட்டம் என்று மாற்றி அமைக்கப்பட்டு 1989–90 ஆவது நிதி ஆண்டு முதல் வீடுகள் கட்டுவதற்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் 30 ஆயிரம் வீடுகள் கட்டவேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர்கள் அல்லாதவர்களுக்கு 201 சதுர அடி பரப்பளவு கொண்ட ஓட்டு வீட்டினைக் கட்டுவதற்காகவும் இந்த கடன் வழங்கப்படுகிறது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறக்கூடிய ரூ. 4,500-ம், தமிழ்நாடு அரசாங்கத்தால் வழங்கப்படுகிற மானியம் 1,500 ரூபாயும் கடன் பெறுவோர் தங்களது சொந்த மூலதனமாகவோ அல்லது கட்டடப் பொருள்களாகவோ ஈடு செய்கிற வகையில் 3,000 ரூபாய் ஆகமொத்தம் 9,000 ரூபாய் மதிப்பீட்டில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்குகூட சென்ற ஆண்டு 1988–89 ஆண்டில் 9.58 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டு இருந்தது. 20 ஆண்டுகள் தவணைகளிலே திருப்பிச் செலுத்தப்படவேண்டும். அது இந்த ஆண்டு முதல் 20 தவணைகள் ஆகவும் வட்டியில் 8.5 சதவிகிதம் செலுத்தினால் போதும் என்றும் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதே போல் இதற்கு முன்னாள் தங்களுடைய வேறுவிதமான சொத்துக்களை அடமானம் வைக்க வேண்டும். தங்களுடைய வீட்டையும் நிலத்தையும் அடமானம் வைக்கவேண்டுமென்ற நிலையை மாற்றி அவர்களுடைய பத்திரங்களை மட்டுமே ஒப்படைத்தால் போதும் என்ற சலுகை இந்த ஆண்டிலேயிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

9–35 மணி

திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் ஏழையெளிய மக்களுக்கு சொந்தத்தில் வீடுகள் கட்ட வழங்குகின்ற கடன்தொகை போதுமானதாக இல்லை. எனவே, இந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறைந்தத் தொகை இருந்த காரணத்தினாலேதான் இந்த ஆண்டு முதல் அது உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டின் நடைமுறைமூலம் எப்படி இத்திட்டம் செயல்படுகிறது என்பதைப் பார்த்து அரசு பரிசீலனை மேற்கொள்ளும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர வீட்டுவசதி வாரியத்தைப் போல கிராமங்களில் இருக்கிற, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததுபோல,

1990 மார்ச் 30]

வீட்டுவசதி வாரியம் வீடுகளைக் கட்டி, ஏழையெளிய மக்கள் நீண்டக் காலத் தவணைகளில் மாதா மாதம் கட்டும்வகையில் சொந்தமாக கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த கொள்கை அறிவிப்பின்படி, கிராமப் பகுதிகள், நகரைச் சார்ந்திருக்கின்ற பகுதிகள் அல்லது நகர பேரூராட்சி களாக இருக்கிற பகுதிகளில் 5 ஆண்டுக் காலத்தில், 500 இடங் களில், ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற கிராம வீட்டு வசதித் திட்டத்தை உருவாக்குகின்ற வகையிலே அந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டிருக் கிறது. வருகிற ஆண்டில் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து வீடு கட்டும் திட்டத்தைத் தொடங்க இருக்கிறோம். ஏற்கெனவே சொன்ன திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமப் புறங்களில் இருக்கிற ஆதி திராவிடர் அல்லாத சாதாரண வறுமைக் கோட்டுக் குக் கீழே இருக்கிற மக்களுக்குப் பயன்படும் வகையில் இத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்திலே, ஏழையெளியவர் என்பதற்கான வரையறை என்ன? இதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு? மனு செய்பவர்கள் எல்லோருக்கும் கிடைக்க வாய்ப்பிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதத்திற்கு 700 ரூபாய்க்குக்கீழே வரு மானமுள்ளவர்களுக்கு, குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு இந்த கடனுதவி வழங்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் ஏழையெளியவர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம் மிக முக்கியமான திட்டம். ஏற்கெனவே இத் திட்டம் ரூரல் ஹவுசிங் ஸ்கீம் என்கின்ற பெயரில் கிராமக் கூட்டுற வுக் கடன் சங்கங்கள் மூலமாக கொடுக்கப்பட்டதாக சொல்கிறார்கள். கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் 6 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது கூட்டுறவு அமைப்பு அல்லது வீட்டுவசதி மாதிரி கொடுக்கப்படுமா? அல்லது வேறு எந்த முறையில் இந்தக் கடனை அரசு வினியோகம் செய்ய கருதி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா கூட்டுறவு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இக்கடன் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஏற்கென்வே கிராமப்புறங்களில் இருக்கின்ற வீடு கட்டும் சங்கங்

களை எல்லாம் சீரமைத்து தாலுகா கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களாக சீரமைத்ததன் மூலம், இச்சங்கங்கள் மூலம்தான் இது வழங்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. வல்லரசு அவர்கள் கொஞ்சம் பொறுமையைக் காட்ட வேண்டும். தங்களுடைய வினா அடுத்து வருகிறது.

மதுரை திருவள்ளுவர் பேருந்து நிலையத்தை நவீனமாக்குதல்.

*6135— திரு. பி. என். வல்லரசு :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரையில் உள்ள திருவள்ளுவர் பேருந்து நிலையத்தை நவீனமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்ல், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இன்னும் இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகர் வளர்ந்து வருகிற ஒரு சிறப்பு மிக்க நகரம். மதுரையிலுள்ள திருவள்ளுவர் போக்குவரத்து நிலையத்திற்கு சென்னை, கன்னியாகுமரி மற்றும் தொலை தூரமான திருப்பதி போன்ற இடங்களிலிருந்து பஸ்கள் வருகின்றன. அப்படி வருகின்ற பஸ்கள் எல்லாம் நிற்க போதிய இட வசதி இல்லாத நிலை உள்ளது. பிரயாணிகள் தங்கவும் அங்கே போதிய இட வசதி இல்லை. இப்படிப்பட்ட நிலையில் மதுரை திருவள்ளுவர் போக்குவரத்து நிலையத்தை நவீனப்படுத்த, அபிவிருத்தி செய்ய அரசு முன்கூட்டியே காலக்கெடுவை நிர்ணயம் செய்து பணிகள் தொடங்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9—40 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல திருவள்ளுவர் போக்குவரத்து கழக பஸ் நிலையத்தி